**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051897

1. District / மாவட்டம் : சென்னை  PS: / காவல்நிலையம் : V & AC சென்னை நகர்  Year: / ஆண்டு : 2021  FIR No.: / மு.த.அ. எண் : 08/2021  Date: / நாள் : 10/12/2021

2. (i) Act சட்டம்: The Prevention பிரிவு-2  Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: of Corruption (Amendment) Act 2018  Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : / குற்ற நிகழ்வு நாள்  Date from : / நாள் முதல் : 08.12.2021  Date to : / நாள் வரை :
Time Period : / நேர அளவு  Time from : / நேரம் முதல் : காலை  Time to : / நேரம் வரை :
(b) Information Received at PS. Date : / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 08.12.2021  Time : / நேரம் : 17.00 மணி
(c) General Diary Reference : Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : 10.12.2021  Time : / நேரம் : 08.00 மணி

4. Type of Information : Written/ Oral : / தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : சுமார் 17 கி.மீ. வடமேற்கு
Beat Number : / முறைக் காவல் எண்  (b) Address : / முகவரி : திருவேற்காடு நகராட்சி அலுவலகம், சென்னை-77.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : / குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : P. கலைவாணன்  (b) Father's/ Husband's Name : / தந்தை / கணவர் பெயர் : பழனி
(c) Date / Year of Birth : / நாள் / பிறந்த ஆண்டு : 28/2021  (d) Nationality : / நாட்டினம் : இந்தியன்  (e) Passport No. : / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் :
Date of Issue : / வழங்கப்பட்ட நாள்  Place of Issue : / வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : / தொழில் : கலைக்குழு [illegible]  (g) Address : / முகவரி : No.11, கவிதா தெரு, அரும்பாக்கம், சென்னை-106.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. பிரகாஷ், வருவாய் ஆய்வாளர்,
திருவேற்காடு நகராட்சி அலுவலகம்,
சென்னை-77.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் K.S. நாகலட்சுமி பதவி காவல் ஆய்வாளர் ஆகிய பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
10/12/21

K.S. Nagalakshmi 10/12/2021
Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
10.12.2021

Name: பெயர் K.S. NAGALAKSHMI
Rank: நிலை INSPECTOR OF POLICE
CC-I, V&AC,
Chennai.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புதுறை, சென்னை நகரப்பிரிவு-2, Cr.No. 08/AC/2021/CC-II, U/s. 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

பணிந்தனுப்பப்படுகிறது:- இன்று 10.12.2021-ந் தேதி காலை 08.00 மணிக்கு சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு -2-ன் காவல் ஆய்வாளர் K.S.நாகலட்சுமி ஆகிய நான் அலுவலகத்தில் பணியிலிருந்தபோது சென்னை, அரும்பாக்கம், கவிதா தெரு, எண்.11-ல் வசிக்கும் திரு. P. கலைவாணன் என்பவர் 08.12.2021 தேதி மாலை 17.00 மணிக்கு அலுவலகம் வந்து கொடுத்த எழுத்து மூலமான புகாரின் பேரில் மறைமுக விசாரணை செய்து இன்று 10.12.2021-ந் தேதி காலை 08.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு:- விடுநர், P.கலைவாணன், த/பெ.பழனி, நம்பர்.11, கவிதா தெரு, அரும்பாக்கம், சென்னை-106. பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, ஆலந்தூர், சென்னை - 16. ஐயா, நான் சென்னை அரும்பாக்கம், பாங்க் ஆப் பரோடா வங்கியில் வீட்டுமனை லோன் பிரிவு கலெக்ஷன் ஏஜெண்டாக வேலை செய்கிறேன். கடந்த வாரம் நான் வேலை சம்பந்தமாக ஆவடி நகராட்சி அலுவலகம் சென்று இருந்த போது திரு.சீனிவாசன் என்பவர் வீட்டு மனைப்பிரிவு லோன் பற்றி என்னிடம் கேட்டார். அவருக்கு சென்னை, திருவேற்காடு, ராஜராஜேஸ்வரி நகர் மனைப்பிரிவில் பிளாட் நெம்பர் 5 மற்றும் 6ல் 1853 சதுரடியில் 2 பிளாட்டுகள் இருப்பதாகவும் அதில் வீடு கட்ட லோன் வாங்க வேண்டும் வழிமுறைகள் என்ன என்று கேட்டார். அதற்கு நான் முதலில் மனைப்பிரிவு அப்ருவல் வாங்க வேண்டும், அதற்கு உங்கள் மனைப்பிரிவிற்கு தற்போது வரைக்குமான வரிகட்டிய ரசீது வேண்டும் என்று கூறினேன். உடனே சீனிவாசன் நான் மனை வாங்கியதோடு சரி, வரி எதுவும் கட்டவில்லை, ஆன்லைனில் திருவேற்காடு முனிசிபாலிட்டிக்கு வரி கட்ட விண்ணப்பித்துள்ளேன் நான் காஞ்சிபுரத்தில் குடியிருக்கேன் என்னால அடிக்கடி சென்னைக்கு அலைய முடியாது நீங்களே வரிகட்டி, அப்ருவல் வாங்கவும் ஏற்பாடு செய்யுங்க நான் உங்களுக்கு தனியாக பீஸ் தர்றேன் என்று கூறினார். அதற்கு நான் அவரிடம் எனக்கு ஆத்தரைசேஷன் லெட்டர் கொடுத்தால் செய்கிறேன் என்று கூறிய போது நான் ரெடி பண்ணி தர்றேன்னு சொன்னார். அதனால் கடந்த 26.11.2021ந் தேதி திருவேற்காடு முனிசிபாலிட்டிக்கு போய் காலி மனை வரி கட்டுவது பற்றி விசாரித்த போது என்னை RI திரு.யுவராஜ் என்பவரை பார்க்க சொன்னார்கள். நான் போய் Revenue Inspector திரு.யுவராஜ் ,என்பவரை பார்த்து விவரம் சொல்லி மனை உரிமையாளர் திரு.சீனிவாசன் ஆன்லைன் மூலம் வரிகட்ட விண்ணப்பித்த ரசீதை அவரிடம் காட்டினேன். அதை பார்த்துவிட்டு, அவர் என்னிடம், மனை உரிமையாளர் திரு.சீனிவாசன் அவர்களையும் பற்றி விசாரித்தார். பிறகு மனைக்கு இதுவரையில் வரி கட்டாமல் இருக்கிறது, மனை உரிமையாளரை வந்து பார்க்க சொல்லுங்கள் நிறைய கணக்கு போட வேண்டியிருக்கு என்று தெரிவித்தார். நான் இதைப்பற்றி திரு.சீனிவாசன் அவர்களிடம் தெரிவித்த போது அவர் தன்னால் அலையமுடியாது என்றும், என்னையே நிலவரி தொடர்பான வேலைகளை

தொடர்ந்து முடித்துவிடுமாறும் கேட்டுக் கொண்டார். மேலும் அதற்காக வேண்டிய ஆத்தரைசேஷன் லெட்டர் ஒன்றையும் தயாரித்து தபாலில் திருவேற்காடு முனிசிபாலிட்டிக்கு அனுப்பிவிட்டு அதன் நகல் ஒன்றினை எனக்கு கடந்த திங்கட்கிழமை அன்று கொடுத்தார். அதன் பிறகு இன்று 08.12.2021ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் ஆத்தரைசேஷன் லெட்டருடன் திருவேற்காடு நகராட்சி அலுவலகம் சென்று RI திரு.யுவராஜ் அவர்களை பார்த்தேன். அப்போது அவர் 2003ல் இருந்து நீங்க இது வரைக்கும் வரி கட்டலை. அத்தனை வருஷத்துக்கு வரி கணக்கு போட வேண்டியிருக்கு அதனால நிறைய வேலை இருக்கு நீங்கள் எனக்கு தனியா ரூபாய்.10,000/-த்தை முன்கூட்டியே கொடுங்க நான் காலிமனை வரி எவ்வளோன்னு கணக்கு போட்டு தர்றேன் அந்த வரிய தனியா கட்டிடுங்க எனக்கு தனியா ரூபாய்.10,000/-த்தை முன்கூட்டியே நில உரிமையாளரிடம் கேட்டு வாங்கி கொடுங்கள், இல்லையென்றால் வரி கணக்கிட மிகவும் தாமதமாகும் பார்த்துக்கோங்க என்று கூறினார். சார் இதை நான் முடிவு பண்ண முடியாது மனை உரிமையாளரிடம் கேட்டு சொல்கிறேன் அவர் கொடுத்தால் வாங்கி கொண்டு வருகிறேன் என்று சொன்னதற்கு நீ முதலில் ரூ.10,000/- வாங்கி வா இல்லையென்றால் நீ வராதே என்று சொல்லி அனுப்பிவிட்டார். RI திரு.யுவராஜ் அவர்கள் வரி தொகையை கணக்கு போட்டு தருவதற்கு ரூ.10,000/- லஞ்சம் கேட்டது பற்றி திரு.சீனிவாசன் அவர்களிடம் தெரிவித்த போது அவர் லஞ்சம் எல்லாம் கொடுக்க முடியாது என்றும், என்னை போலீசில் புகார் கொடுக்கும்படியும் கேட்டுக் கொண்டதின் பேரில், நில உரிமையாளர் திரு.சீனிவாசன் அவர்களின் காலிமனைக்கான வரி தொகையை கணக்கு போட்டு தருவதற்கு மட்டும் RI திரு.யுவராஜ் அவர்கள் ரூபாய்.10,000/- லஞ்சம் கேட்டது தொடர்பான இந்த புகாரை நான் அளிக்கிறேன். திரு.சீனிவாசன் அவர்கள் திருவேற்காடு முனிசிபாலிட்டிக்கு அனுப்பியிருந்த ஆத்தரைசேஷன் லெட்டரின் நகல் ஒன்றையும் இதனுடன் இணைத்துள்ளேன். லஞ்சம் கேட்ட RI திரு.யுவராஜ் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன். Sd. XXX P. கலைவாணன் 08.12.2021. Sir, Received a complaint on 08.12.2021 at 17.00 hrs. Sd XXX K.S.Nagalakshmi, Inspector of Police, CC –II, V&AC, Chennai -16. Sir, after due verification, a case was registered in V &AC, Chennai City – II, Cr.No. 08/AC/2021/CC-II, U/s. 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 on 10.12.2021 at 08.00 hrs.

The original FIR along with complaint submitted before the Hon'ble Chief Judical Magistrate cum Special Judge, Tiruvallur and other copies submitted to officers concerned.

K.S. Nagalakshmi Ins/CC II 10/12/2021
Inspector police,
CC-II, V&AC,
Chennai